உடல் எந்த வகையிலும் பார்ப்பதற்கு கோரமாக இருக்காது. எனவே நம்மைப் போன்றவர்கள் கூட அப்படி வழங்குவதற்கு முன் வருவது என்ற ஒரு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் கண் பார்வையற்றவர்கள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரம் எடுக்கப்பட்டிருக்கிறதா. அவர்களுக்குப் பார்வை வழங்க அரசு ஏதேனும் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கண் பார்வையற்றோர் எவ்வளவு என்ற புள்ளி விவரம் ஏறத்தாழ எடுக்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் பேர் இரண்டு கண்களிலே ஒன்றிலே படலம் ஏற்பட்டு முழுவதும் தெரியாமலும், மற்றொரு கண் படலத்தால் சிறிது மறைக்கப்பட்ட நிலையிலும் இருப்பதாகவும், 3—4 லட்சம் பேர் ஒரு கண்ணில் மட்டும் படலத் தால் மறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது ஓரளவிற்கு 40 முதல் 45 வயதிலிருந்தும் 50 முதல் 60 வயதுள்ளோரிடத்திலும் ஏழை எளிய மக்களிடம் மிகுதியாகவும் உள்ளது. நல்ல ஊட்ட மான இயற்கை உணவை உண்ண வழி இல்லாத மக்களிடத்தில் கண் நோய் அதிகமாகிறது. அதற்கு அறுவை சிகிச்சை அளிக் கும்போது, அந்தப் படலம் ஏற்பட்டு முற்றாத நிலையில் உள்ளோ ருக்கு சிகிச்சை அளிப்பது என்பது முடியாது. காரணம் படலம் முற்றிய நிலையில் இருந்தால்தான் அறுவை சிகிச்சை நடத்த முடியும். இந்தத் திட்டம் 5 ஆண்டு காலத்தில் ஒரு 10 லட்சம் பேர் அளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு விரும்பு கிறது.

கிராமங்களுக்குப் பொது கழிப்பிடங்கள்

*** 157 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 14—10—1969-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், பொதுமக்கள் உபயோகத்திற்கென கிராமங்கள்தோறும் பொது கக்கூஸ்கள் கட்டவும் அதற்கான

1972 ஆகஸ்ட் 18]

செலவில் 75 சதவிகிதம் அரசு மானியமாக அளிக்கவும் அரசினரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அரசு ஏற்க வேண்டிய மொத்த செலவு பற்றி அறிக்கை அனுப்புமாறு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர் கோரப்பட்டுள்ளார் அவ்வறிக்கை வந்தவுடன் இது பற்றி பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட கழிவிடங்கள் இல்லாத காரணத்தால் தெருக்களில் எல்லாம் கழிவு நீர் ஓடுகின்றது. கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் கூட இப்படிப்பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். சபைக்கு விளக்கம் தேவையில்லை.

திரு. கே. எ. வகாப் : அப்படியென்றால் அந்தத் திட்டத்தை உடனடியாக அறிக்கை வந்தவுடன்—அறிக்கை எப்படியிருந்தாலும்—அமுல் நடத்த அரசு முன்வரும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அமைச்சருடைய உறுதி மொழி என்பது நிதி வசதியைப் பொறுத்தது. நிதி கிடைக்குமானால், அமைச்சரைவிட உறுதியானவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னை நகரத்தின் பல பகுதிகளில் இப்படிப்பட்ட வசதியில்லாத பகுதிகள் இருக்கின்றன. அதற்கு முக்கியத்துவம் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் ரிலவன்சி இல்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இவ்வளவு பெரிய சென்னை நகரத்தைப்பற்றிய பிரச்னையாதலால், தனிக் கேள்வி போட்டு சென்னை நகரத்தைச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.